CHELLAMMAL WOMEN'S COLLEGE

# ஆய்வுக்கோவை

## தமிழ் இலக்கியத்தில் பண்பாட்டுக் கூறுகள்

### பன்னாட்டுக் கருத்தரங்கம்


செல்லம்மாள் மகளிர் கல்லூரி
தமிழ்த்துறை
பச்சையப்பன் அறக்கட்டளை நிறுவனம்
112, அண்ணாசாலை, கிண்டி, சென்னை-32.

செந்தமிழ் அறக்கட்டளை
திருவில்லிப்புத்தூர்


தமிழ் இலக்கியத்தில் பண்பாட்டுக் கூறுகள்

ஆய்வுக்கோவை

ISBN 819 - 090 - 53 L7

புடையீர் வணக்கம்.

பச்சையப்பன் அறக்கட்டளையின் கீழ் இயங்கி வரும் ம்மாள் மகளிர் கல்லூரி திக்கெல்லாம் புகழ்மணக்கும் பிலை செல்லம்மாள் அவர்களின் உயர்ந்த சிந்தனையின் மாக பெண்களின் கல்வி மேம்பாட்டுக்கு உதவும் வகையில் க்கப்பட்டது. செல்லம்மாள் அவர்கள் பெரும் செல்வத்தை முழுமையாக பச்சையப்பன் அறக்கட்டளையிடம் டத்து கல்விப்பணிகளுக்கு அவற்றைப் பயன்படுத்தச் செய்து பான புகழ் செல்வத்தைப் பெற்றார்.

971-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இக் கல்லூரி இன்று தழைத்து சுழற்சி-1 (6 இளங்கலைத்துறைகள் தமிழியல் துறை இளநிலை ஆய்வு) சுழற்சி-2 (6 இரு பிரிவுகளிலும் மாணவியரை அழைத்துச்செல்லும் வகையில் செயல்பட்டு தமிழின் தொன்மையையும், பெருமையையும், உலகிற்கு க்கும் வகையில் பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கினை நடத்தி உள்ளது.

கம் சிறப்பாக நடைபெறவும், ஆய்வுக்கோவை சிறப்பான ல் வெளிவருவதற்கும் ஆய்வுக்கட்டுரைகள் வழங்கிய ரியர்கள், சான்றோர்கள், ஆய்வாளர்கள் அனைவருக்கும்

ISBN 819 - 090 - 53 L7

# பொருளடக்கம்


பக்கம்

1. செந்தமிழும் சீனமும் - முனைவர் வா.மு.சே.முத்துராமலிங்க ஆண்டவர் 29

2. தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுக் கூறுகள் சீவகசிந்தாமணியில் கலைகள் - அ. அபிபுஅம்மா 34

3. இலக்கியங்கள் காட்டும் தமிழரின் திருமண சடங்குகள் - ர.அபிராமி 39

4. கல்வெட்டுகள் மூலம் அறியப்பெறும் சோழர்கால ஆட்சிமுறை- அ. அமலோற்பவமேரி 45

5. வை. மு.கோதைநாயகி படைப்புகளில் நாடக அமைப்பு - வீ.அம்பிகேஸ்வரி 50

6. சொல்லிலக்கணப் பகுப்பு இளம்பூரணர் உரையும் நேமிநாதமும் - க.அன்புக்கோகிலா 56

7. நெய்தல் நிலத்துப் பெண்களின் தொழில்கள் - ஜா.அனிதா 62

8. பழந்தமிழர் விருந்தின் வழி ஆளுமை நிலைப்பாடு - செல்வி பா.அருண் பிரியா 68

9. சூர்ப்பனகை - பேகம் கலிதா 73

10. நெடுநல்வாடையில் தமிழரின் பண்பாடு - உ. திவ்யா 78

11. தமிழ் இலக்கியங்களில் காணப்படும் பண்பாட்டு கூறுகள் பட்டினப்பாலை கூறும் பண்பாடு - ஜ. ஆமினா பாத்திமா 83

12. கம்பராமாயணத்தில் மனித பண்பாட்டுக் கூறுகள் - சா.அஞ்சலை 88

13. கண்ணகி தனித்த ஆளுமைப் படைத்த பெண்தெய்வம் - பேரா. முனைவர் க.சந்திரசேகரன் 93

14. தொல்காப்பியர் காட்டும் தமிழக மகளிர் - மு. சித்ரா 98

15. நாலடியார் கூறும் பண்பாட்டு அடையாளங்கள் - முனைவர் ஜோ. தனலட்சுமி 103

16. தமிழ் இலக்கியங்கள் கூறும் தமிழர் பண்பாட்டுக் கூறுகள்- பி. தாரணி 109

17. புறநானூறு காட்டும் தமிழ்ப் பண்பாட்டு நெறிமுறைகள் - முனைவர் க. சிவனேசன் 115

18. பல்லவர் செப்பேடுகளில் நீர்நிலைகள் - மு.ஆ.ப.சரஸ்வதி 120

19. கல்வெட்டில் பிரமதேயம் - முனைவர். மு.ஆ.ப.சரஸ்வதி 126

20. திருமங்கையாழ்வாரின் பக்தி வெளிப்பாடு - முனைவர் மா. பாப்பா 131

21. சூடாமணியின் சிறுகதைகளில் உறவுச் சிக்கல்கள்- முனைவர்.இரா.விமலாதேவி 137

22. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் - முனைவர் மா. ரமாதேவி 141

23. எழுதிணை காட்டும் தமிழர் வாழ்வியல் நெறிகள் - முனைவர் செ.கனிமொழி 145

24. திருக்குறள், பழமொழி நானூறு வழி அவையறிதல் - முனைவர்.ப.தேன்மொழி 151

25. பிற்கால நீதி இலக்கியங்கள் வெளிப்படுத்தும் ஈகைப் பண்பாடு - டாக்டர் மு. சற்குணவதி 155

26. வானம் வசப்படும் நாவலில் பண்பாட்டுக் கூறுகள் - டே.பெமிலா 161

27. தமிழ் இலக்கியத்தில் நடுகல் - கோ.சுபாஷினி 165

வாரியம், கழனி வாரியம், ஏரி வாரியம் ஊர் வாரியம், உதாசீன வாரியம், பொன் வாரியம், சம்வத்சர வாரியம், கோயில் வாரியம், கணக்கு வாரியம், கலிங்கு வாரியம், பஞ்சவார வாரியம், தடிவழி வாரியம் என மொத்தம் 13 வாரியங்கள் செயல்பட்டுள்ளன.[15] அதிகபட்ச வாரியங்கள்செயல்பட்ட சபை இதுவே. கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் முதலாம் பராந்தகன் காலத்தில் நிலை இது. சபைகளிலும், வாரியங்களிலம், பணியாற்றியவர்கள் ஊதியம் பெற்றார்களா என்பதற்கான சான்றுகள் இல்லை. ஆனால் மத்யஸ்தன் எனும் கணக்கன் ஊதியம் பெற்றுப் பணியாற்றிய அலுவலன் ஒவ்வொரு சபையிலும் நியமிக்கப்பட்டுள்ளான்.[16]

இச்சபைகளும் வாரியங்களும் அவ்வவ்வூர் பொதுவான நலன்களுக்காகச் செயல்பட்டவையே. சபைகளின் பன்முகப் பரிமாணங்களும், அவற்றின் பணிகளும் பல சான்றுகளின் வாயிலாக அறியத்தக்கன. பிராமணர்க்கு வழங்கப்பட்ட வளமான ஊர்கள் பிரமதேயம், சதுர்வேதிமங்கலம் எனப்பட்டன. பல்லவர் காலத்தில் தொடங்கிய இவ்வழக்கம் சேழர் காலத்திலும் தொடர்ந்தது எனலாம்.

## அடிக்குறிப்புகள்

1. ஆ.வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ப.31
2. ஆவணம், இதழ்.1, அக்டோபர்1991, ப.68
3. ‘வேள்விக்குடிச் செப்டே'', பாண்டியர் செப்பேடுகள் பத்து,1999
4. S. Rajavelu, ''Migration of Brahmins in Tamil nadu under the Pallavas, '' Kaveri, 2001, p.404
5. ‘உள்ள குரவ பாளையம் செப்பேடுகள்,'' பல்லவர் செப்பேடுகள் முப்பது, 1999
6. SII 14\37
7. K.A.N. Sastri, op. Cit.,p.494
8. SII 6\346
9. SII 6\294
10. ARE 1904-05, pp.136-138
11. SII 3\156
12. K.A.N. Sastri, op. Cit.,p.497
13. ARE 1904-05, pp.136-139
14. SII 3\12
15. SII 3\99
16. SII 6\356, 7\442

# 20. திருமங்கையாழ்வாரின் பக்தி வெளிப்பாடு

**முனைவர் மா. பாப்பா,**
உதவிப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமா கல்லூரி, மதுரை.

## முன்னுரை

பக்தி இயக்கம் வலுப்பெற்ற காலங்களில் ஆழ்வார்கள் தங்களது பாசுரங்களில் இறைத் தன்மையை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் குறிப்பிட்டுள்ளனர். அரசர்களின் இறைமைப் பண்பு தமிழகத்தில் எவ்வாறு செயல்பட்டது என்பதை ஆழ்வார்களின் நாலாயிர திவ்யப்பிரபந்தம் சுட்டிக்காட்டுகிறது. சமயவாதிகளைப் போற்றிக் காத்து வந்த அரசர்களும் பக்தியுணர்வு நிரம்பப் பெற்றவர்களாய்த் திகழ்ந்தனர். அப்பக்தி உணர்வை மக்கள் மத்தியில் உருவாக்கிய ஆழ்வார்களின் சமயக் கருத்தைப் போன்று சங்க இலக்கியங்களிலும் திருமாலைப் பற்றிய செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. இதுபோல் பக்தி நிலையில் தோய்ந்த திருமங்கை ஆழ்வாரின் பக்தி வெளிப்பாடு எவ்வாறு அமைந்துள்ளது என்பதை ஆய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

## பக்தி

இறைவன் மீது கொண்டுள்ள நம்பிக்கையே பக்தியாக வெளிப்படுகிறது. பக்தி என்பதற்குப் பல்வேறு விளக்கங்கள் தரப்படுகின்றன. “ஒன்றன் பால் கொள்ளும் ஆழ்ந்த பற்றினைப் பக்தி என்கிறோம். பற்று என்பது பத்தி என மாறிற்று. பக்தி என்ற வடசொல்லைப் ‘பத்தி' எனத் தமிழ்ப்படுத்தியும் கூறலாம். ஆனால், பக்திக்குச் சமமான சொல்லாக ‘அன்பு' என்ற சொல்லைக் கொள்ள இயலாது. எனினும் பக்தி என்பது இறைவனிடத்தும் இறையடியாரிடத்தும் கொள்ளும் அன்பு ஆகும்.”[1]